மாண்புமிகு திரு. இ. மதுசூதனன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ); திருவில்லிப்புத்தூர் பகுதியில் உள்ள நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தேவையான நூல் திருவில்லிப்புத்தூர் நூல் கிடங்கின் மூலம் எவ்வித குறைபாடின்றி விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

336—

போடிநாயக்கனூரில் ஏலக்காய் ரசம் தயாரிக்கும் திட்டம்

* 3556 — திரு. தேனி பன்னீர்செல்வம்:

மாண்புமிகு ஊரகத்தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ,

(அ) போடிநாயக்கனூரில் ஏலக்காய் உற்பத்தி அதிகம் இருப்பதால், ஏலக்காய் ரசம் (Essence) தயாரிக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அது அரசுத் துறை மூலம் நடத்தப்படுமா? அல்லது தனியார் துறை மூலம் நடத்தப்படுமா?

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) வினா எழ வாய்ப்பில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் நேரம் முடிவுற்றது.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. சிறப்புக் குறிப்பு

முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பை மீறி நிலவரி மற்றும் கடன் பாக்கிக்காக ஜப்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவது குறித்து :

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள், தன்னுடைய தொகுதியில் அரசாங்கத்தின் அறிவிப்பை மீறி, நிலவரி வசூலுக்காக, ஜப்தி நடவடிக்கைகள் எடுக்கப்படுவதாக ஒரு அறிவிப்பை என்னிடத்திலே கொடுத்திருக்கிறார். அதே போன்ற அறிவிப்புகளை, திரு. ஆர். சிங்காரம்,